1979 ஏப்ரல் 20]

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியில் தயாராகும் இந்த பாலிஸ்டர் துணி எந்தெந்த மாநிலங்களுக்கெல்லாம் அனுப்பப் படுகிறது? மேலும் எங்கெல்லாம் அனுப்புவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: சென்ற ஆண்டுதான் கைத்தறியில் பாலிஸ்டர் துணியை உற்பத்தி செய்து அறிமுகம் செய்து விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். நமது மாநிலத்திலுள்ள தேவையையே நம்மால் இன்னும் பூர்த்தி செய்ய முடியவில்லை. அந்த அளவுக்கு இன்னும் உற்பத்தி பெருகவில்லை. ஆகவே இப்போது எந்த மாநிலத்திற்கும் கைத்தறி பாலிஸ்டர் துணி அனுப்பப்படுவதில்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற பாலிஸ்டர் துணி ஏற்கனவே வெளி வந்த பழைய டிசைன்களில்தான் இருக்கிறது. ஆகவே புதிய டிசைன்களில், இந்தக் கைத்தறி பாலிஸ்டர் துணி களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கைத்தறி வெள்ளி விழா கண்காட்சியைப் போய்ப் பார்த்தால், எந்த அளவுக்கு புதிய ரகங்கள் எல்லாம் வந்திருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

திருநாகேசுவரத்தில் சாயத் தொழிற்சாலை.

வினா எண். 714—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநாகேசுவரத்தில் அரசு தரப்பில் சாயத் தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: இல்லை.

பி. காம். வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்தல்.

*வினா எண். 742—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி. காம். வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள நன்கொடைகள் வசூலிக்கப்படுகின்றன என்ற புகார் களைத் தவிர்க்க புது நடைமுறை ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) அரசுக் கல்லூரிகளில் மாணவர்களை பி.ஏ., பி.எஸ்ஸி., பி. காம். வகுப்புகளில் சேர்ப்பதற்கான விதிமுறைகள் குறித்து அரசு தனது ஆணை எண். 796, கல்வி, நாள் 19-5-75-ல் விளக்கமான அறிவுரைகள் அளித்துள்ளது. இதே நடை முறை விதிகளையே தனியார் கல்லூரிகளிலும் வணிக இயல் வகுப்பில் மாணவர்களைச்சேர்ப்பதற்கு செயல்படுத்தும்படி ஒருசுற்றறிக்கை மூலம் தனியார் கல்லூரிகளுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த பி.காம். வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு நன் கொடையாக வசூலித்து வருகிறார்கள் என்ற புகார் வந்து இருக் கிறது என்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக் கிறார்கள். இப்படி எந்தெந்தக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு நன்கொடை வாங்கினார்கள் என்ற விபரத்தை தெரிவிக்க முடியுமா? அப்படி வாங்கியவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? மேலும் இப்படி மாண வர்களைச் சேர்ப்பதற்கு என்று நன்கொடை, கல்லூரிகள் வசூ லிக்கக் கூடாது என்ற முறையைக் கொண்டு வருவதற்கு அரசு ஏதாவது ஆலோசித்திருக்கிறதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச்செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த கல்லூரிகளில் இப்படி நன்கொடை வாங்கப்பட்டது என்ற குறிப்பு இல்லை. ஆனால் இந்த முறையைத் தவிர்க்கும் பொருட்டும், இதை ஒழுங்குபடுத்து வதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது. வணிகவியல் பட்டப் படிப்புக்கு (பி.காம்.) மாணவர்களைச் சேர்க்கும்போது தனியார் கல்லூரிகளில் சிலவற்றுள் நன்கொடை பெறுதல் போன்ற முறை கேடான செயல்கள் நடந்து வருவதாக கல்லூரிக் கல்வி இயக்கு நருக்கு தெரிய வந்தது. அவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, 1978-79 ஆம் ஆண்டிலிருந்து வணிகவியல் பிரிவுக்கு மாணவர் களைத் தேர்வு செய்யும் போது பின்வரும் வழிமுறைகள் பின் பற்றப்படல் வேண்டும் என்றும், கல்லூரிக் கல்வி இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

1. ஒவ்வொரு கல்லூரியிலும் பி.காம். வகுப்புக்கு உள்ள இடங்களில் 40 விழுக்காடு வரைக்கும் புதுமுக வகுப்பில் வணிக இயல் பிரிவில் மிக அதிகமான மதிப்பெண்கள் பெறுபவர்களை பொதுப் பங்கில் ஒதுக்கீடு செய்யப்படாத 51 சதவீதம் இடங்கள் நேரடியாகத் தேர்வு செய்ய வேண்டும்.

1979 ஏப்ரல் 20]

2. மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதற்கான கடைசி தேதியை கல்லூரி முதல்வர் நிர்ணயிப்பார். அந்தத் தேதி முடிந்தவுடனே, வந்துள்ள விண்ணப்பங்களை ஆராய்ந்து அவற்றை மதிப்பெண்கள் அடிப்படையில் பட்டியல் செய்ய வேண்டும். ஒதுக்கீடு செய்யாத 51 சதவீதம் இடங்களில் இன்னும் நிரப்ப வேண்டிய காலியிடங்களை முதலில் நிரப்ப வேண்டும். பின்னர் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவீதம் இடங்களை அவ்வகுப்பு மாணவர்களைக்கொண்டும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதம் இடங்களை அவ்வகுப்பு மாணவர்களைக்கொண்டும் நிரப்ப வேண்டும். இவ்வாறு தேர்வு முடிந்த ஒரு வார காலத்திற்குள் மாணவர்களுக்கு நுழைவு அனுமதிச் சீட்டு அனுப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பேரவை செயலர் அவர்கள் இவ்வளவு விரிவாகப் படிக்கவேண்டியதில்லை. சுருக்கமாகச் சொன்னால் போதும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: (அமைச்சரின் பேரவை செயலர்): இதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்டார்கள். ஆதலால் விவரமாக இதைப் படிக்க வேண்டியிருக்கிறது.

3. பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு ஒதுக்கிய இடங்களில் எவையேனும் நிரப்பப்படாமல் இருந்தால், அவற்றை கல்லூரி தொடங்கி ஒரு வாரம் வரையில் நிரப்பாமலேயே வைக்க வேண்டும். அவ்வினத்தவருள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், இறுதி தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெற்றாலும் அவற்றையும் பரிசீலனை செய்து அக் காலி இடங்களை நிரப்பவேண்டும்.

(முற்பகல் 9-10.)

(4) பி.காம். படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, பின்வரும் முன்னுரிமை முறையைப் பின்பற்ற வேண்டும்:—

(1) புகுமுக வகுப்பில் வணிகவியல் பாடப் பிரிவில் முதல் வகுப்பு பெற்றவர்கள்;

(2) அப்பிரிவில் இரண்டாம் வகுப்பு பெற்றவர்கள்,

(3) அப்பிரிவில் மூன்றாம் வகுப்பு பெற்றவர்கள் ;

(4) புகுமுக வகுப்பில் வேறு எந்தப் பிரிவிலேனும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் ;

(5) புகுமுக வகுப்பில் வேறு எந்தப் பிரிவிலேனும் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள்.

இந்த முன்னுரிமை முறையை நேரடியாக மாணவர்களைச் சேர்க்கும் 40 விழுக்காடு இடங்களுக்கும், விண்ணப்பங்கள் பெற்ற கடைசி தேதிக்குப்பின் பட்டியல் போட்டுத் தேர்ந்தெடுத்து அனுமதிக்கப்படும் 60 விழுக்காடு இடங்கள் ஆகிய இரண்டு வகை இடங்களுக்கும் பொருந்துவதாகும்.

(5) சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், எந்தச் சிறுபான்மையினரின் நலனுக்காக அக்கல்லூரி நடத்தப்படுகிறதோ, அச்சிறுபான்மையினருக்கு பி.காம். வகுப்பில் கொடுத்த இடங்கள் போக எஞ்சியவற்றை மூன்றாவது பத்தியில் சொன்ன முறையைப் பின்பற்ற வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

திரு. அ. சுவாமிதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பி.காம். மாணவர்களைச் சேர்ப்பதில் சில கல்லூரிகளில் பணம் வாங்குவதாகச் சொல்கிறார்கள். இட நெருக்கடி காரணமாகவும், குறைந்த இடம் ஒதுக்கப்படுவதாலும்தான் இந்த நிலைமை இருக்கிறது. எனவே, அதிகமான இடங்களை கல்லூரிகளில் ஏற்படுத்திக் கொள்வதற்கு உரிமம் வழங்கினால், இத்தகைய நிலை வராது. ஆகவே, எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை அரசின் கருத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.